உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

"**ஞான பூசாவிதி**" என்னும் இந்நூலும் பழைய உரையும் இவ்வாதீனத்துக் கல்விக் களஞ்சியமாகிய சரஸ்வதி மஹால் புத்தகசாலையிலுள்ள ஏட்டுச் சுவடியிலிருந்து முதன் முதலாக 1942-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்றது. இந்நூலையும் உரையையும் நன்கு ஆராய்ந்து பதிப்பிக்கும்படி கட்டளையிட்டருளியவர்கள் இவ்வாதீனத்து இருபதாவது குருமஹாசந்நிதானமாக எழுந்தருளியிருந்த **ஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமிகள்** ஆவார்கள். அப்பொழுது (1937—1951) இதனை நன்கு ஆராய்ந்து பதிப்பித்தவர்கள் அடியேனுக்குமுன்பு இவ்வாதீன வித்துவானாக இருந்தவர்களும், இவ்வாதீனத்துக் கல்வியை மேலகரம், ஸ்ரீ மே. சொ. சுப்பிரமணியக் கவிராயரவர்களிடமிருந்து முறையாகக் கற்றுவல்லவர்களாய் வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகளிற் புலமைமிக்கவர்களாய் விளங்கியவர்களும் ஆகிய ஸ்ரீ சிதம்பர ராமலிங்க பிள்ளை அவர்களேயாவர். பதிப்பித்த சில காலங்களுக்குள்ளேயே இப்புத்தகம் கிடைப்பது அரிதாயிற்று. அதனால், இப்பொழுது இவ்வாதீனத்திலே இருபத்தோன்றாவது குருமஹாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து சித்தாந்த சைவசமய பரிபாலனமும், செந்தமிழ்ப் பரிபாலனமும், குருக்ஷேத்திர சிவக்ஷேத்திர பரிபாலனங்களும் திருந்திய செந்நெறியில் செவ்வே நிலைபெறச் செய்தருளி மிக்க கீர்த்தியுடன்

விளங்குபவர்களாகிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்** பீடாதிபத்தியம் ஏற்றுக்கொண்ட மறுநாளி லேயே இந்த ஞானபூசாவிதி, இராமாயணதாற்பரிய சங்கி ரகம், சித்தாந்த மரபு கண்டனகண்டனம், சிவசமவாதவுரை மறுப்பு, ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி மும்மணிக்கோவை முதலிய நூல்களை 'இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுதவுக' எனக் கட்டளையிட்டருளிப் பெருங்கருணையுடன் தமது திருக்கரத் தால் இந்நூல்களையும் தந்தருளினார்கள். மேலேகண்ட நூல் களும், பிறவும் வேண்டுமெனச் சித்தாந்தசைவ மெய்யன்பர் கள் இடைவிடாமல் ஆதீனத்துக்கு விண்ணப்பம் செய்வா ராயினர்.

எனினும், சரஸ்வதி மஹால் புத்தகசாலையில் ஏட்டுச் சுவடிகளிலேயே இருந்த பலநூல்களைப் பாதுகாக்கவேண்டிய இன்றியமையாமையைக்கருதி மஹாசந்நிதானத்தில்அடிக்கடி விண்ணப்பஞ் செய்து வேறு பலநூல்களைப் பிரதி பண்ணி அச்சிட்டு வந்தேன். ஆகவே, 'உடனே அச்சிட்டுதவுக' என இட்ட கட்டளை இத்துணைத் தாமதமாய் திருவருள் கூட்ட இப்பொழுது இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளி வருகிறது. இப்பதிப்பில் யான் செய்யக் கடவதாகிய எந்தச் செயலுமில்லை. பிழைகள்உளவாயின் பெரியோர்கள் பொறுத் தருளுவார்களாக. ஸ்ரீ-ல-ஸ்ரீ மஹாசந்நிதானம் கட்டளை யிட்டருளியபடி மற்றை நூல்களும் இரண்டாம்பதிப்பாக விரைவில் வெளிவரும். 'காமிகாதியாக்மசார தசகாரியம்' என்னும் நூல் இப்போது ஆராயப்பெற்று வருகிறது. இந்த ஞானநூலும் விரைவில் அச்சிடப்பெறும். பிற செய்திகள் முன்னுரையால் அறியலாகும்.

இங்ஙனம்,

திருவாவடுதுறை
1—12—52.

சித்தாந்த சைவமணி
த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
ஆதீனவித்துவான்.



இருபத்தொன்றுவது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகசுவாமிகள்

முன்னுரை

" கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணெய் பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞானபானுவாகி குயிலாரும் பொழிற்றிருவாவடுதுறைவாழ் குருநமச்சிவாயதேவன் [க் கயிலாய மரபுடையோன் திருமரபு நீடூழி தழைகமாதோ."

ஞானபூசாவிதி யென்னும் இந்நூல் நிருவாண தீக்ஷை பெற்று ஞானபூசை செய்தற்கு அதிகாரம் பெற்றவர்கள் செய்யவேண்டிய பூசாவிதிகளைக் கூறுகின்றது. இந்நூல் பதினெட்டுத் திருவிருத்தங்களை யுடையது. இதற்கு முதனூல் ஸ்ரீ வாதுளாகமத்து ஞானபூசாவிதிப் படலமாகும்.

இந்நூலைத் தமிழில் இயற்றிய ஆசிரியர் பெயர் புலப்படவில்லை. இந்நூலை இயற்றினர் ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் என்பர் ஒரு சாரார். இந் நூலின் ஆறாவது திருவிருத்தத்தில் குரவர்பூசை விதிக்குமிடத்து,

' விரவுமுபா பதிசிவனன் மறைஞான சம்பந்தன்
மேவுபரத் தருணந்தி மெய்கண்ட தேவன்
திருவளரும் பரஞ்சோதி சத்தியமெய்ஞ் ஞான
தெரிசனிகள் பரநந்தி '

எனச் சந்தானாசாரியர் பெயர் கூறும் வழி ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருப்பெயரும் கூறப்பட்டிருப்பதால், இந்நூலாசிரியர் ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகளல்லரென்பதும், அவ்வாசாரிய சுவாமிகள் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தவரென்பதும் புலனாம்.

நமது திருவாவடுதுறை யாதீனத்து வித்துவானாக இருந்த ஸ்ரீ சபாபதி நாவலரவர்கள் விஜயஷு கார்த்திகைமீ (1893ஷு) பிரசுரித்த 'சித்தாந்தமரபு கண்டன கண்டனம்', 'சிவசமவாத வுரைமறுப்பு' முதலிய நூல்கள் அடங்கிய புத்தகத்தின் வரலாற்றிலே

> "......... மேற்போந்த அம்பலவாண தேசிகர்பால் ஞானோபதேசம்பெற்ற உலகுடையநாயனார் முதலாயினோர் இயற்றிய திருக்கழிநெடில், வாதுளாகம சாரமான ஞான பூசாவிதி, வருணபத்ததி முறையான கிரியாபூசாவிதி என்பனவும் மேலை ஞான நூல்கள்போல அம்மரபினரால் போற்றிக் கொள்ளப்படுவனவாம்........."

எனக் கூறுகின்றனர். இதனாலும் இந்நூலியற்றினார் ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அல்லரென்பதும், நமது திருவாவடுதுறை யாதீனத்து மூன்றாவது ஆசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் காலத்தவரோ அவர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தவரோ ஆதல் வேண்டு மென்பதும் விளங்கும்.

இனி, எவரோ குழறுபடையாக எழுதிவைத்த 'சித் தாந்தமரபு' என்னும் நூலைத் தம்மாற் குறிக்கப்பட்டோர் கொண்ட மரபெனக்கொண்டு, தருமபுரத்து ஸ்ரீமத் சிதம்பர நாத தம்பிரான் என்பவர் 'சித்தாந்த மரபு கண்டனம்' என் னும் மறுப்பு நூல் ஒன்று எழுதினார். அக்கண்டனத்தில் ஆசங்கித்தற்குரியன வல்லாதவற்றை யாசங்கித்துக் குற்றம் போலச் சில கூறப்பட்டமையின், அதனை மறுத்துத் திருவா வடுதுறையாதீனத்து ஸ்ரீமத் மாதவச் சிவஞான யோகிகள் 'சித்தாந்த மரபு கண்டன கண்டனம்' என்னும் நூலை இயற்றியருளினார்கள். அச்சித்தாந்த மரபு கண்டன கண்ட னத்தின் முப்பத்துநான்காவது பகுதியிலே,

"சிவபூசையில் சாமானியார்க்கிய நீராட்டுமளவும் லிங்கசுத்தி; அதன்பின் ஆசனமூர்த்தி வித்தியாதேகம் ஆவாகனாதி; அதன்பின் அபிடேக முதலாயின என்றிம் முறையே சோமசம்பு சிவாசாரியர் ஞானசிவாசாரியர் முதலிய பூர்வாசாரியர் சிவாகமத்தின் வழிவிதித்த பத்ததிகளோடும் அவற்றை மொழிபெயர்த்துச் செய்த ஞானாமிர்தம் சிவார்ச்சனாபோத முதலியவற்றோடும் முரணிச் சிவசமவாத தாபகரான அகோரசிவாசாரியரையுள்ளிட்ட ஆதுனிகர் மூலவசனமின்றித் தாமே படைத்திட்டுக் கொண்ட பத்ததிகளையே கைப்பற்றிக் கேவலங் கெதானுகெதிக நியாயத்தில் வீழ்ந்து, அபிடேகஞ்செய்து திருவொற்றாடை சாத்திப் பீடத்திலெழுந்தருளுவிக்குமளவும் லிங்கசுத்தி; அதன்பின் ஆவாகனாதி யெனக்கொண்டு பாதிப்பூசைத்தொழில் பயப்பாடின்றி வறிதே செய்திளைக்கின்றீர். 'ஆதியாதாரசக்தி', 'ஆயனாபாதியளிந்து' என்னும் ஞானபூசாவிதியின் தாற்பரியம் பற்றியாகிலும் அறிந்துகொள்ளமாட்டிலீர்"

என இந்த நூலின் 13, 14-ஆம்செய்யுட்களை ஸ்ரீமத் மாதவச் சிவஞான சுவாமிகள் எடுத்தாண்டிருக்கிறார்கள். இதனால் இந்நூல் பிரமாண நூலாகக் கொள்ளப்படும் சிறப்புடைய தென்பது விளங்கும்.

இந்நூல் 1934-ஆம்வருடம் தருமைப் பிரசுரமாக வித்துவான் ஸ்ரீமத் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் எழுதிய குறிப்புரையுடன்வெளிவந்திருக்கின்றது. இந்நூலுக்கு நமது திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீலஸ்ரீ பஞ்சாக்கரதேசிக சுவாமிகளது மரபினரால் இயற்றப்பட்ட பழைய வுரைப்பிரதி யொன்று அடியேன் இவ்வாதீன கைங்கரியத்தை மேற்கொண்டு நூல் நிலயத்தை ஆராய்ந்து பார்த்தகாலத்தில் கிடைத்தது. பழைய நூல்களையும் உரைகளையும் பேணல் வேண்டுமெனத் திருவுளங்கொண்டிருக்கும் இவ்வாதீனத்து

இருபதாவது மகாசந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகளிடத்தில் அடியேன் இவ்வுரை விஷயத்தை விண்ணப்பம் செய்ததும், தேசிக சுவாமிகள் இந்நூலையும் இவ்வுரையையும் அச்சிட்டு உலகத்திற்கு உபகரிக்க வேண்டுமென்று பெருங்கருணையுடன் கட்டளையிட்டருளினார்கள். அவர்களது பெருங்கருணைத்திறத்தால் இந்நூல் பழையவுரையுடன் இப்பொழுது வெளியிடப்படுகிறது.

நுணங்குஞ் சமய நூற்றொல்லை நுவலுந் தகைத்தாய் நந்திமுனி
கணங்கட் களித்த சிவஞான போதக் கதிநூ னெறிகாட்டிப்
பணங்கொளரவர் துறைசையில்வாழ்பஞ்சாக்கரதேசிகன்மலர்த்தாள்
வணங்க வழுத்த மனத்திருத்த வாய்த்த பிறப்பை வாழ்த்துவாம்.

திருவாவடுதுறை,
விஷு௵ தைமீ 2௳

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை,
ஆதீனவித்துவான்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

ஞான பூசாவிதி

(பழைய உரையுடன்)

க. பணித்தவரு ளுடன்சந்தி பண்ணி னோர்கள்
பயில்காலந் தருசந்தி பகர்வன் கங்குற்
புணர்த்தியருக் குமவுடலாற் போகந் துய்த்துப்
பூதவுடற் போகத்திற் போத நாதன்
உணர்த்தியபோ துணர்ந்துணர்வை யுயிரிற் சந்தித்
தொண்புனலா லுடற்சுத்தி யோங்கு வித்துக்
கணக்குறுநீ றிடக்கையி னைந்தெழுத்தாற் குழைத்துக்
கலந்தொருமைத் திருமுண்டங் காட்டத் தீட்டே.

இதன் பொருள் :— பணித்த அருளுடன் சந்தி பண்ணினோர்கள் - இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதமுண்டான அவதரத்தில் தமக்குப் பிராணனாய் நின்ற சிவன் ஆசாரியமூர்த்தியாய் எழுந்தருளிவந்து ஞானதீக்கை செய்து ஆறத்துவாக்களையும் சோதித்து மலமாயாதி கன்மங்களினின்றும் விடுத்துப் பிருதிவி முதல் நாதமீறான தத்துவங்களையும் பஞ்சமலங்களையும் தரிசிப்பித்து நீக்கி இவை அந்நியமென்று கற்பித்து நிறுத்தின அருளாலே தம்மைத் தரிசித்து இந்த அகண்ட பரிபூரணமான அருளையும் தரிசித்து இந்த அருளுடனே கூடிக் காட்சியற அருளாய் நின்ற அவதரத்துத் தோன்றிய இன்பத்தைத் தரிசித்து அழுந்தின சீவன்முத்தரானவர்கள், பயில்காலம் - பிராரத்தம் புசிக்க வேண்டுகையால் இந்தப் பிராரத்த சரீரத்திலேகூடிப்போதக் கற்பித்த

காலமளவும், தரு சந்தி பகர்வன் - நிலை திரிந்தாலும் பிரபஞ்சமாய் நில்லாமல் ஞானமாய் நின்று செய்துபோதரும் ஞானிகள் சந்தியைச் சொல்லாநின்றேன், கன்குற் புணர்த்திய - ஆணவவிருளாலே பொருந்தின அவத்தைகள் ஐந்தனையும் அதீதமுதலாக உணர்த்துகின்ற முறைமையிலே கூட்டியருளின, சூக்குமவுடலால்-புரியட்டக சரீரத்திலே, போகம் துய்த்து - அனுபவிக்கத்தக்க கன்மங்களாகிய சுகதுக்கங்களைப்புசித்து, பூதவுடற் போகத்தின்-பூத சரீரத்தினாலே புசிக்கத்தக்க கன்மங்களைப் புசிக்குமிடத்து, போத நாதன் - ஆன்ம நாயகனானவன், உணர்த்தியபோது உணர்ந்து - தன்னுடைய இச்சாஞானக்கிரியைகளாலே சுத்ததத்துவங்களையும் சுத்ததத்துவங்களினாலே கலாதிகளையும் கலாதிகளினாலே ஆன்மாவினுடைய இச்சாஞானக்கிரியைகளையும் உணர்த்தி இப்படித் தன் பிரேரகத்தினாலே அந்த மலத்தை நீக்கி இந்தக் கருவிகளைக் கூட்டி உணர்த்தின அவதாரத்து அவன் ஆன்மாவினிடத்திலே அநாதியிலே பிரிவற நின்று கருவிகளைக் கூட்டி யுணர்த்தியும் இந்த உடல்களாலே புசிப்பித்தும் கருவிகளை நீக்கி உறங்குவித்தும் செய்கிற முறைமையை அறிந்து, உணர்வை - உனக்குப் பிராணனாய் நின்ற அந்த இன்ப சொரூபனாகிய சிவனை, உயிரிற் சந்தித்து - உன்னிடத்திலே முன்பு போலத் தரிசித்து, ஒண்புனலால் உடற்சுத்தி ஓங்குவித்து - இப்படிப்பட்ட ஞானசந்தி கூடாதாகில் சுத்த சலத்தினாலே தேகசுத்தி பண்ணி, கணக்குறு நீறு - கற்பம் உபகற்பம் அநுகற்பமென்னும் உத்தமமான திருநீற்றை, இடக்கை - இடதுகையிலேயிட்டு, அஞ்செழுத்தால் குழைத்து - ஸ்ரீ பஞ்சாக்கரத்தினாலே குழைத்து, கலந்து ஒருமை - இந்தச் சிவத்துடனே பிரிவற நின்று, திருமுண்டம் காட்டத் தீட்டு - திரிபுண்டரமாகத் திருமேனியில் அந்த அந்தத் தானங்களிற் சாத்துவாயாக என்பதாம். (1)

௨. ஆசொழிய வான்மசித்தைச் சுத்தவித்தை பிரியா
தறியுநெறி யமர்ந்துசிவ மநுபூதி யாகப்
பேசியமுத் தத்துவத்தா னீர்குடித்துச் சுத்தி
பெருக்கினிமிர்ந் திரேசித்துப் பூரித்துப் பிடித்து

மாசகல மானதமா மந்திரத்தை யுரைத்து
வளர்தார மிருகாமு மன்ன நீவித்
தேசமாங் குலிகளினுந் திகழங்கங் களினுந்
திசைமுழுது முடன்முழுது மணிதிருமந் திரமே.

(இ—ள்.) ஆசு ஒழிய - ஆன்மாவினுடைய அஞ்ஞானம் விட்டுத் தன் குற்றமானது நிற்க, ஆன்ம சித்தைச் சுத்தவித்தை பிரியாது அறியும் நெறி - ஆன்மஞானத்துடனே சிவஞானமும் அநாதியே கூடிநின்று அறிவிக்கிற முறையில், அமர்ந்து சிவம் - சிவமொழிய ஆன்மாவுக்குச் சேட்டையில்லையென்று சிவத்துடனே கூடிநின்று, அநுபூதியாக - சந்தேகமற அறிந்து, பேசிய முத்தத்துவத்தால் நீர்குடித்து - கிரியாவிதிக்குச் சொல்லப்பட்ட ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவமென்னும் தத்துவத்திரயத்தால் ஆசமனம்செய்து, சுத்தி பெருக்கி - அதரசுத்தி தொடுமிடம் கரசுத்தி செய்து, நிமிர்ந்து - செவ்வையாக இருந்து, மானதமா மந்திரத்தை மாசகல உரைத்து இரேசித்துப் பூரித்துப் பிடித்து - ஸ்ரீ பஞ்சாக்கரத்தைச் சிவபாவனையோடு மனத்தினாலே உச்சரித்துப் பிராணாயாமஞ் செய்து (இது இரேசகத்தால் அஞ்ஞானம் வெளியே போகிறதாகவும், பூரகத்தால் ஞானம் உள்ளே செல்லுகிறதாகவும், கும்பகத்தால் அந்தச்சிவஞானம் உள்ளெங்கும் நிறைகிறதாகவும் பாவிக்கவேண்டுமென்பதாம்), வளர்தாரம் இருகாமும் மன்ன நீவி - வர்த்தியாநின்ற பிரணவத்தாலே இரண்டு கையையும் பொருந்தத் துடைத்து, தேசு அமர் அங்குலிகளினும் திகழ் அங்கங்களினும் திசைமுழுதும் உடல்முழுதும் அணிதிருமந்திரம் - சுத்தியினாலே விளக்கம் பொருந்தின பத்து விரல்களிலும் விளங்காநின்ற அங்கங்களிலும் பத்துத்திசைகளிலும் சரீரமெங்கணும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை அணிந்துகொள்வாயாக என்பதாம்.

இதன் கருத்து :— சிவாநுபூதியாக ஆசமனம் தொடுமிடம் பிராணாயாமம் கரநியாசம் அங்கநியாசம் திக்குபந்தனம் இவை செய்க என்றவாறும்.

ஆசமனத்திரயஞ் செய்தல் நம்முடனே பந்தித்த தத்துவம் முப்பத்தாறும் அஞ்ஞான சொரூபமாதலால், சிவபாவனையாலே அவற்றிற்குச் சுத்திசெய்தவாருகக் கொள்க.

திக்கு பந்தனம் நம்முடைய அநுட்டான பலத்தை அசுராதி துட்டர் சோரஞ் செய்யாவாறெனக் கொள்க. (2)

ங. நிலம்புனறீக் கால்வான்ரு னிகழுமிரு சுடராய்
நிலவிருநான் குருநினைந்தா னிழற்கடவுள் பதமும்
கலந்தபர குரவரிரு வகையோர் தாளுங்
கருதருநற் றேசிகன்றன் கழலிணையுங் கருதித்
துளங்கிடுமா விளக்கியநீர் தெளித்துக் கொண்டு
தூநீரா லாசமனஞ் சுத்தி செய்து
நலங்கொணியா தம்புரிந்து நாதனிட நணுகி
நாட்டமுறச் சூழ்ந்துமுகங் காட்டி டாயே.

(இ—ள்.) நிகழும் நிலம் புனல் தீ கால் வான் தான் இரு சுடராய் - விளங்காநின்ற பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் ஆன்மா சோம சூரியராகிய இவற்ருல் தம்பிரானர் திருமேனி கொண்ட அட்ட மூர்த்தமாகி, நிலவு இருநான்கு உருநினைந்து - அதற்குப் பொருந்தின எட்டு மந்திரமும் உச்சரித்து அருக்கியங் கொடுத்து, ஆல் நிழல் கடவுள் பதமும் - வட விருக்ஷ நிழலில் எழுந்தருளியிருக்கின்ற தக்ஷிணமூர்த்தி தேவர் திருவடிக்கு அர்க்கியமும் பராங்முக அர்க்கியமும் கொடுத்துப் பத்துருச் செபித்து, கலந்த பர குரவர் இருவகையோர் தாளும் - சிவத்தொடு கலந்தருளிய சந்தானசாரியர் எழுவரும் சமயாசாரியர் நால்வருமாகிய இவர்கள் ஸ்ரீபாதமும், கருதரு நற்றேசிகன்றன் கழலிணையும் கருதி - நினைத்தற்கரிய உண்மையுபதேசம் பண்ணின தன்னுடைய ஆசாரியன் ஸ்ரீ பாதத்தையும் தியானஞ்செய்து, துலங்கிடுமாவிளக்கி - ஞானப் பிரகாசம் பொருந்த அர்க்கியங் கொடுத்து, அந்நீர் தெளித்துக் கொண்டு - அந்தத் திருவடி விளக்கின திருமஞ்சனத்தைச் சரீர

மெனக்கும் புரோக்ஷித்துக்கொண்டு; தூநீரால் ஆசமனஞ் சுத்தி செய்து - புறங்கையாலே நீவித் தூயசலத்தாலே தத்துவங்களுக்குச் சுத்தி வரும்படி ஆசமனத்திரயஞ்செய்து, நலங்கொள் நியாதம் புரிந்து - ஆன்மாவுக்கு எல்லா நன்மையையும் உண்டாக்கும் கர நியாசம் அங்கநியாசம் முதலான கிரியையுஞ்செய்து, நாட்டமுறச் சூழ்ந்து முகங் காட்டிடாய் - பிரதக்ஷிண நமஸ்காரமுஞ் செய்து உள்ளும் புறம்பும் ஒரு பொருளென்று ஞான நாட்டத்தாலே பொருந்தப் பார்த்து உன்னுடைய முகம் முதலான கரணங்கள் தம்பிரானுர்க்குத் தோன்றத் தரிசிப்பாயாக என்பதாம்.

இதன் கருத்து :— அர்க்கியங் கொடுத்து நியமம் முடித்துத் திருக்கோயில் நியமம் பண்ணுக என்றது.

இருநான்கு உரு :— சர்வாய நமஃ, பவாய நமஃ, உருத்திராய நமஃ, பீமாய நமஃ, பசுபதயே நமஃ, ஈசாநாய நமஃ, மகாதேவாய நமஃ, உக்கிராய நமஃ என அறிக.

நாட்டமுறச் சூழ்ந்து முகங்காட்டிடாயென்றது தரிசன மாத்திரத்திலே தீக்ஷையும், தண்டனிலே மலக்ஷயமும், நமஸ்கார பிரதக்ஷிணத்திலே சனன மரண நீக்கமுமாமென வறிக. (3)

ச. இற்புகுந்து பதம்விளக்கி யிருந்து நீறிட்
டிலங்குபிரா ணாயாம நியாத மெய்தி
யர்க்கியமொன் றாக்கியந்நீர் சுத்தி சேர்வித்
தண்ணறிரு வடிவிளக்கி யலர்கள் சாத்திச்
சிற்பரமாத் தற்பரத்து ளழுந்தி நீங்குந்
தீங்ககலத் தூங்கொருமை திரிந்த தாகிற்
சொற்பதமா ஞானநூ லோத லாதி
தொடங்கவையு மடங்கிலருட் டொழிறு வக்கே.

(இ-ள்.) இற்புகுந்து பதம் விளக்கி யிருந்து நீறிட்டு - பாத சுத்தி ஆசமனஞ்செய்து பூசாமண்டபத்திலே புகுந்திருந்து திருநீறு சாத்திக்கொண்டு, இலங்கு பிராணாயாமம் நியாதம் எய்தி - விளங்கா நின்ற பிராணயாமமும் நியாசமும் செய்து, அர்க்கியமொன்றாக்கி

அங்கீர் சுத்தி சேர்வித்து - ஒரு பாத்திரத்திலே திருமஞ்சனம் பூரித்து அர்க்கியமாகச் சிவமந்திரத்தினாலே பதினொருதரம் அர்ச்சித்து அபிமந்திரித்து அந்த அர்க்கியஜலத்தால் திரவியங்களைப் புரோக்ஷித்து நிரீக்ஷணாதியாலே சுத்தியுண்டாக்குவித்து, அண்ணல் திருவடி விளக்கி அலர்கள் சாத்தி-உடையவர் திருவடிகளிலே ஆடியருளப்பண்ணித் திருப்பள்ளித் தாமங்களுஞ் சாத்திச் சேமஞ் சாத்திக் காலபூசை முடித்து, (அங்வயம்) தீங்கு அகல நீங்கும் சிற்பரத்துள் அழுந்தித் தற்பரமாத்தாங்கு - அநாதி கூடின அஞ்ஞானமலத்திரயம் உன்னைவிட்டு நீங்கும்படி மேலாகிய ஞானத்துடனே கூடி ஞானஞேயம் பிறந்து தற்பரமாகிய ஞேயத்திலே அழுந்தி அசைவற நின்றுவிடு, ஒருமை திரிந்ததாகில் - ஏகாக்கிர சித்தமாய் நின்ற உன்போதம் திரிந்ததானால், சொற்பதமாம் ஞானநூலோதலாதி தொடங்கு - திரிபதார்த்த நிர்ணயத்தைச் சத்தார்த்தக் கிரமமாக வகுத்துக் கூறும் ஞானசாத்திரங்களை ஓதல் ஓதுவித்தல் சிந்தித்தல் தெளிதல் முதலானவைகளைத் தொடுத்துக்கொண்டு இவ்வண்ணஞ் செய், அவையும் மடங்கில் அருட்டொழில் துவக்கு-அந்த ஓதலாதிகளும் போதங் கவிந்துநிற்கப் பாக்கியமில்லாதபொழுது அந்த ஞானநூலிலே நாம் சொன்னபடி ஞானபூசைத் தொழிலைத் துவக்கிச் செய்வாயாக என்பதாம்.

இதன் கருத்து:—காலபூசை முடித்துச் சமாதியாதல் சாத்திர சிரவணமாதல் செய்க என்றதெனக் கொள்க. (4)

ரு. நீராடித் தருப்பித்திற் புகுந்திருந்து நியமஞ்
செய்துயிரை யங்ககர நியாத மெய்தி
யாராநற் பாத்தியா சமன மொன்றி
லர்க்கியமொன் றினிலமைத்தர்க் கியச லத்தாற்
சீராருஞ் சன்மார்க்க மான ஞானந்
திகழுந்தென் றிசைவாயில் சுத்தி சேர்வித்
தேராருந் துவாரமிது பாரித் தாண்ட
வெழிற்குரவ ரெழுவரையு மிறைஞ்சி டாயே.

(இ-ள்.) நீராடித் தருப்பித்து - சுத்த சலத்திலே ஸ்நானஞ் செய்து காலையிற்செய்த கிரியைகளுஞ்செய்து இருபத்தொரு திருப் பேர்க்கும் அர்க்கியமுங்கொடுத்து நியமமுடித்து, இற்புகுந்திருந்து- பாதசுத்தி யாசமனஞ்செய்து பூசாமண்டபத்திலே புகுந்து பொருந் தின ஆசனத்திலேயிருந்து, விபூதி.சாத்தி.உயிரை.நியமஞ்செய்து - வாயுவை இரேசக பூரக கும்பகஞ்செய்து, அங்ககர நியாதம் எய்தி- கரநியாசம் அங்கநியாசம் எய்தி, ஆரா நற்பாத்தியாசமனம் ஒன்றில் அர்க்கியம் ஒன்றினில் அமைத்து - நன்மை பொருந்திய பாத்திய ஆசமனம் ஒரு பாத்திரத்தில் நிறைத்து அர்க்கியம் ஒரு பாத்திரத் தில் அமைத்துப் பஞ்சாக்கரத்தினாலே எழுதரமும் பதினொருதரமு மாக அர்ச்சித்து அபிமந்திரித்து, அர்க்கிய சலத்தால் சீராருஞ் சன் மார்க்கமான ஞானந்திகழும் தென்றிசை வாயில் சுத்தி சேர்வித்து - அந்த அர்க்கிய சலத்தால் சிறப்பார்ந்த சன்மார்க்கமாகிய ஞானத் தைப் பக்குவர்களுக்கு வழங்கும் தெற்குத்திருவாயிலிலே புரோக்ஷித் துச் சுத்தியுண்டாக்கி, எர் ஆரும் துவாரம் இது-அழகு பொருந்திய இந்தத் துவாரத்திலே, ஆண்ட எழிற்குரவர் எழுவரையும் பாரித்து- நம்மை அடிமை கொண்டருளிய பிரகாசம் பொருந்தின சந்தானா சாரியர் எழுவரையும் நிறைத்து, இறைஞ்சிடாய் - பூசிப்பாயாக என்பதாம்.

முதற் செய்யுளில் 'ஒண்புனலாலுடற் சுத்தியோங்குவித்து' என்று கூறி இச்செய்யுளிலும் 'நீராடித் தருப்பித்து' எனக் கூறிய தால் இது மத்தியான்ன சந்தி. (5)

சூ. விரவுமுமா பதிசிவனன் மறைஞான சம்பந்தன்
மேவுபாத் தருணந்தி மெய்கண்ட தேவன்
திருவளரும் பரஞ்சோதி சத்தியமெய்ஞ் ஞான
தெரிசனிகள் பரநந்தி திருவாயி லிருபால்
மருவுறவுள் வலமிடமா முன்னர்வட முகமாய்
வருபவரை யபிமுகமாய் மன்னுவிக்க வுரைசேர்
அருள்புரிமுத் திரையினுருத் திரரெதிரஞ் சலிசே
ரஞ்செழுத்து நந்திக்கா யனைவரையு நிறுத்தே.

(இ-ள்.) விரவும் உமாபதி .... பராந்தி - .... எழுவரையும், திருவாயில் இருபால் மருவுறஉள்வலம் இடமா-தெற்குத்திருவாயில் இருபக்கத்தினும் வலதுபக்கத்தில் மூவரையும் இடப்பக்கத்தில் மூவரையும் .... பீடத்திற்குள் எழுந்தருளப் பண்ணி, ...
உரைசேர் அருள்புரி முத்திரையின் உருத்திரர் எதிர் அஞ்சலிசேர்-இருடிகளுக்குப் பெரிய வேதாகமங்களுக்கு வியாக்கியானம் அருளிச் செய்து வியாக்கியான முத்திரையுடனே கூடியிருந்துள்ள தக்ஷிணா மூர்த்தி தேவர்க்கு எதிரே இந்த ஆசாரியர்கள் அஞ்சலியத்தராக இருக்கிறதாகத் தியானிக்க. (சிவார்ச்சனை பண்ணுமிடத்து ஆசாரியன்மாரை அர்ச்சிக்குமது எதென்னில்) அஞ்செழுத்து நந்திக்காய் அனைவரையும் நிறுத்து-பஞ்சாக்கரமே திருமேனியாகிய பரமாசாரியனை அருச்சிக்கும் பொருட்டுச் சாக்ஷியாக எழுந்தருளப்பண்ண வேண்டும் என்பதாம்.

அபிமுகம் - எதிர்முகம். (6)

எ. சந்தான குரவரிவர் சமயாங்க வக்கந்
தக்கவட நீறுமுறை தழனிருதி குடபால்
வந்தாரிற் சம்பந்தர் வாகீசர் பெருமாள்
வாதவூர் மன்னிவர்கள் வாயுமுதல் வடபாற்
செந்தாது மலரானற் சமயகுர வரையுஞ்
சேர்த்துகதம் பெயர்முடிவிற் றிகழ்திருமந்திரத்தா
னந்தாபங் கழிந்தகல மொழிந்துகொள்பூந் தவிசி
னுதனுக்கா தனமாக நடுமலரா விறைஞ்சே.

(இ-ள்.) இவர் சந்தான குரவர் - முன்சொன்ன இவர்கள் சந்தானசாரியர், சமயாங்க அக்கந் தக்கவடம் நீறுமுறை தழல் நிருதி குடபால் - இந்தச் சைவசமயத்திற்கு அடையாளமாகிய தகுதியையுடைய உருத்திராக்கமாலையை அக்கினி மூலையினும் திருநீற்றுக்கிழியைத் தென்மேற்றிசையினும் சிவஞானபோதத் திருமுறையை மேற்றிசையினும் எழுந்தருளப்பண்ணி அர்ச்சனைசெய்து, வந்தாரில்

சம்பந்தர் வாகீசர்பெருமாள் வாதவூர்மன் இவர்கள் நற்சமயகுரவரையும் வாயுமுதல் வடபால் - சிவசமய பரிபாலனமும் பரசமய நிராகரணமுஞ் செய்யும்பொருட்டுத் திருவவதாரஞ் செய்தாரில் இந்நால்வராகிய சமயாசாரியரையும் வாயுமுதல் ஈசான மீறாக, செந்தாது மலரால் சேர்த்துக தம்பெயர் முடிவில் திகழ்திருமந்திரத்தால் - மாட்சிமைப்பட்ட தாதுபொருந்திய மலர்களால் அவரவர் பெயரீற்றில் பஞ்சாக்கரங்கூட்டி அர்ச்சிக்க, நந்தாபம் கழிந்தகல மொழிந்துகொள் - உன்னை அநாதியே பந்தித்த மலத்திரயத்தாலுண்டான துயர்விட்டு நீங்கும்படி இவர்களிடம் வேண்டிக்கொள்க, பூந்தவிசில் நாதனுக்கு ஆதனமாக நடுமலரால் இறைஞ்சு - பொலிவினையுடைய மெத்தையின் நடுவே தம்பிரானார்க்கு ஆதனமாகப் புஷ்பத்தால் அர்ச்சித்து வழிபடுவாயாக என்பதாம்.

தவிசு - மெத்தை. (7)

௮. அஞ்சலிசெய் திருந்துடல நானல்லேன் ஞான
மண்ணலது யானெனதென் றிடவமைந்த
புஞ்சமலி தனுகரண புவன போகம்
பொய்யெனமெய் யுணர்த்தியவப் போத மேநந்
தஞ்சவுட லிந்தவுட லெடுத்த வீடு
கானழியு மளவுமஃதிற் றங்கு வார்போல்
வஞ்சமுட னமர்துமெனு மிதுமேற் கொள்ளும்
வாய்மையது பூதசுத்திப் பான்மை யன்றே.

(இ-ள்.) அஞ்சலி செய்திருந்து - அஞ்சலிசெய்து செவ்வையாக இருந்து, உடலம் நான் அல்லேன் - தூல சூக்குமசரீரம் ஆன்மாவாகிய நான் அல்லேன், ஞானம் அண்ணலது - இவ்வுடம்பை நானல்ல என்று அறிவித்த ஞானம் தம்பிரானுடைய ஞானம், யான் எனது என்றிட அமைந்த புஞ்சம் மலி தனு கரண புவன போகம் பொய்யென மெய்யுணர்த்திய அப்போதமே நம் தஞ்சவுடல் - தானல்லாத உடம்பைத் தானென்றும் தன்னுடைய வல்லவாகிய புவன போகங்களைத் தன்னுடைய என்றும் அகங்கார மமகாரங்களைச் செய்தற்கு ஏதுவாகநின்ற கூட்டமாக நிறைந்த தனுகரண புவன போகங்

களாகிய மாயா காரியத்தைப் பொய்யென்றும் திரிபதார்த்த வுண்மையை மெய்யென்றும் அறிவித்து நின்ற அந்த உண்மை ஞானமே நமக்குச் சுத்தமான உடம்பு, இந்த உடல் எடுத்த வீடுதான் அழியுமளவும் அதிற்றங்குவார்போல் வஞ்சமுடன் அமர்தும் - இந்த உடம்பின்கண்ணே நல்லதோர் வீடுபுகும் அவாவினை யுடையான் முன்னுள்ள வீட்டை விடுத்தலும் விழைதலும் செய்யாமல் நாளிலே அழியுமளவும் அதிலிருந்து அழிந்த பின்னர் நல்லதோர் வீடுபுகுவார்போல் வஞ்சகமாய்ப் பொருந்தியிருக்கின்றோம், எனும் இது மேற்றொள்ளும் வாய்மையது பூதசுத்திப் பான்மை - என்றிவ்வாறு மேற்கொண்டொழுகும் உண்மையே பூதசுத்தியின் பகுதியாம் என்பதாம்.

உடம்பு நானல்லேன், உடம்பு நானல்ல என்றறிவித்த ஞானம் தம்பிரானுர் ஞானம், அந்த ஞானமே நமக்கு உடம்பு, மாயா காரியவுடம்பு அழியுங்காறும் வஞ்சகமாகப் பொருந்தியிருக்கின்றோமென்றெண்ணல் என்று இங்ஙனம் நால்வகையாகக் கண்டு நிற்றல் பூதசுத்தி என்றவாறாயிற்று.

மெய்யுணர்த்திய என்றது சிவம் சத்து ஆன்மா சதசத்து மலம் அசித்து என்றுணர்த்திய எனக்கொள்க. (8)

கூ. ஓங்குடலந் திருக்கோயி லுள்ளிடமுள் ளிடமா
முட்டொழிலும் புறத்தொழிலுமுரியவரே புரிவார்
தீங்கிலுயிர் சிவலிங்கஞ் சிவன்சீவ னியாதுஞ்
செயவேண்டா பசுஞானஞ் சிவஞானஞ் சிறந்த
பாங்கதுநம் மன்பளவி லுபகரண பூசைப்
பரிசதுநற் றெரிசனமெய்ப் பணிமுழுது மடங்கித்
தூங்கிடநம் மின்புருவச் சுடராய் நிற்குந்
தொன்மையதந் தரியாகத் துறைய தன்றே.

(இ-ள்.) ஓங்குடலம் திருக்கோயில் - சத்தியாலுயர்ந்ததேகம் திருக்கோயில், உள்ளிடம் உள்ளிடமாம் - இந்தக் கோயிலுக்குள் மண்டபம் வதென்னில் மூலாதாரமுதலாகிய ஷடாதாரங்களாகும், உட்டொழிலும் புறத்தொழிலும் உரியவரே புரிவர் - உட்டொழில்

செய்து பூசிக்கும் நம்பியாரும் புறத்தொழில் செய்யும் பரிசாரகர்களும் இச்சாஞானக் கிரியாசத்திகளும் பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசன் சதாசிவனென்னும் பஞ்சகர்த்தாக்களுமாவர், நீங்கிலுயிர் சிவலிங்கம்-குற்றமில்லாத ஆன்மாவே சிவலிங்கப்பெருமான், சிவன் சீவன் - ஆன்மலிங்கத்திற்குப் பிராணன் சிவன், யாதும் செய வேண்டா பசுஞானம் - யாதொரு தொழிலும் உன் போதத்தாலே செய்யவேண்டாம், சிவஞானம் சிறந்த பாங்கது - சிவஞானத்தாலே உன்னையும் சிவனையும் கண்டு பூசித்தலே சிறந்த பான்மையுடையதாம், நம் அன்பு அளவில் பூசையுபகரணப் பரிசது - உள்ளே பூசிக்கும் நமது சிதாகாசமே அந்த உடையவருக்கு அளவிலாத சோடசோபசார பூசையின் முறைமை, நற்றெரிசனம் மெய்ப்பணி மடங்கி நம் இன்புருவச் சுடராய்த் தங்கிட நிற்குந் தொன்மையது - நம்முடைய தேகாதிவாதனை கழன்று ஞானத்திலே போதம் விழுந்து அசைவறநின்ற இடத்திலே உள்ளே ஆனந்தம் விளைந்து சுகசொரூபமாய் நின்ற முறைமையே நல்ல சிவலிங்க தரிசனம், அந்தரியாகத் துறையது - ஆகையால் இப்போது சொன்னதுவே ஆன்மசுத்தியினுடைய முறைமையாம் என்பதாம். (9)

௧௦. ஞானமே னியனைநனி நாட வேறோர்
ஞானநமக் கின்றதுதா னமாகி நிற்கு
மானபோ தருச்சித்த லரிதா மென்னி
னன்னதுமந் தரியாக மாகும் போதத்
தானமே வின்வினைகள் பலியாவாறுற்
றன்செயலற் றவனிறைவிற் றூனு மூழ்கிப்
போனபோ தறியாது சிவாது போதம்
புணர்பூமி சிவபூமிப் பொலிவு தன்றே.

(இ—ள்.) ஞானமேனியனை நனி நாட வேறு ஓர் ஞானம் நமக்கு இன்று - ஞானமே திருமேனியாகவுடைய சிவபெருமானை மிகவும் கருதுகைக்குத் தனித்தொரு ஞானம் நமக்கில்லை, அதுதான் நமாகி நிற்கும் - அந்த ஞானசொரூபமான சிவன் ஆன்மாவாய்

நிற்கும், ஆனபோது - இப்படி நிற்கிறதானபடியாலே, அருச்சித்தல் அரிதாம் என்னில் - அந்தப்பொருளை அருச்சிக்குமவன் நம்மாலே நீங்கவும் நீக்கவும் படாதபடியாலே அருச்சித்தல் அரிதென்று காணில், அன்னதும் அந்தரியாகம் ஆகும் - அதுவும் அந்தரியாக பூசையாகக் கொண்டருளும், (மேல் தானசுத்தியருளிச் செய்கின் றார்) போதத் தானம் மேவின் வினைகள் பலியா-ஞானமாகிய தலத் தைப் பொருந்தினவர்களுக்குத் தொழில்கள் கூடா, ஆனால் தன் செயலற்று - ஆகையாலே தன்னுடைய இச்சாஞானக்கிரியைகள் சீவியாமல், அவன் நிறைவில் தானும் மூழ்கி - சிவனுடைய அகண்ட பரிபூரணமான ஞானத்திலே ஆன்மா அழுந்தி, போனபோது அறி யாது சிவாநுபோகம் புணர்பூமி - சென்றகாலந் தோன்றாமல் நின்று சிவாநுபோகத்தைப் பொருந்துகைக்கிடமாகிய பராசத்தியாக, சிவ பூமிப் பொலிவது - இவ்விடத்தில் சிவனை அருச்சிக்கும் தானமாகிய பெருமை பெற்ற சிவாநுக்கிரஹத்தைத் தியானித்தல் தானசுத்தி யாம் என்பதாம்.

இதனாற் சொல்லியது ஞானமாய் நிற்கிறதே பூசையென்ற தென்பது. (10)

கக. நாலிரண்டு திருவுருவ நோக்கி நோக்கா
னலங்கொடிர வியசுத்தி நயந்து சென்னிப்
பாலிலங்கர்க் கியமலராற் றனையர்ச் சித்துப்
பத்துருமந் திரசுத்தி பயிற்றி நாதன்
மேலிலங்கு மலரொதுக்கி யுருவ நோக்கி
விமலனிறை வுணர்ந்தெதவையு மேனி யான
சீலமுமங் கருவுதிரு வுருவ மான
சிறப்புமுணர்ந் திலிங்கசுத்தி சேர்த்தி டாயே.

(இ—ள்.) நாலிரண்டு திருவுருவம் நோக்கி நோக்கால் நலங் கொள் திரவிய சுத்தி நயந்து - திருப்பள்ளித்தாமம் முதலான திர வியங்கள் பரமசிவன்கொண்ட அட்டமூர்த்தத்திற்குள்ளே என்று கருதி ஞானக்கண்ணுடன் கூடி மீண்டும் ஊனக்கண்ணாலே பார்த்து

நன்மை யுடைத்தாகிய திரவியசுத்தி செய்து, சென்னிப்பால் இலங்கு அர்க்கியம் மலரால் தனை அர்ச்சித்துப் பத்து உரு மந்திர சுத்தி பயிற்றி-சிரசின்மேலே விளங்காநின்ற அர்க்கிய ஜலத்தினாலே மூன்றுதரம் புரோக்ஷித்து ஆசனமூர்த்தி மூலத்தாலே புஷ்பத்தினாலே தன்னைப் பூசித்து இடக்கையிற் புஷ்பம் வைத்து வலக்கையால் மூடிப் பஞ்சாக்ஷரத்தாலே பத்துருச் செபித்து மந்திரசுத்தி செய்து, நாதன்மேல் இலங்கும் மலர் ஒதுக்கி - உடையவரை எழுந்தருளப் பண்ணிப் பரிவட்டமும் திருமுடிமேல் நிர்மாலிய புஷ்பமும் கழித்து, உருவம் நோக்கி - உடையவர் திருமேனியைப் பார்த்து, விமலன் நிறைவு உணர்ந்து - பரமசிவன் எவ்விடத்தும் சர்வதோ வியாபியாயிருக்கிற முறையையறிந்து இந்தத் திருமேனியிலே பிரசன்ன பூரணமென்றும், எவையும் மேனியான சீலமும்-சிவனுக்குச் சித்து அசித்துக்களெல்லாம் திருமேனியான முறைமையாலே இந்தத் திருமேனி விசேடமான திருமேனியென்றும், அங்கு அருவு திருவுருவமான சிறப்பும் உணர்ந்து - இந்தத் திருமேனி இச்சா ஞானக் கிரியா சொரூபமான உண்மையென்றும் இந்த மூன்று பாவனையும் அறிந்து, இலிங்கசுத்தி சேர்த்திடாய் - இலிங்கசுத்தி செய்வாயாக என்பதாம்.

இதனாற் சொல்லியன திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி மூன்றுமாம்.

நோக்கி நோக்காவென இரண்டுநோக்கிச் சொல்லியது ஞானக் கண்ணை முன்னிட்டு ஊனக்கண்ணாலே பார்க்க என்பதற்கென்க.

தானசுத்தி ஆன்மசுத்தியுடனே கூட்டிப் பஞ்சசுத்தியாகக் கொள்க. (11)

கஉ. இன்புருவச் சிவன்படைத்தற் கிச்சை காலத்
திசைவுழிவித் தியாதேகி யாகியெழிற் கிரியை
முன்பெருகக் குடிலையினை யடைந்து நாத [துத்
முந்துவிந்தக் காமனுநன் மொழிமுறையே வகுத்

தன்பொருவின் மந்திரத்தாற் சதாசிவாதி யுதவிச்
சகவிரிவு தருமாற்கீழ்ச் சரியாதி நால்வர்க்
கன்பமரத் துன்பமலம் பவமிருதி வழிதீர்த்
தறமுரைத்த கருணையனை யர்ச்சியுமிச் சியுமே.

(இ-ள்.) இன்ப உருவச் சிவன் படைத்தற்கு இச்சை காலத் தினைவுழி - சுகசொரூபியாய் வாக்குமனாதீத கோசரனாய் நிருவிகற் பனாயிருந்த பரமசிவன் ஆன்மா கன்மமலத்தாலே அழுந்திக்கிடக் கின்ற தன்மையைக் கண்டு சகலமும் சிருஷ்டிருக்கவேண்டுமென்று இச்சை நிகழ்ந்த விடத்து இச்சாசத்தியாகவும், வித்தியாதேகி யாகி- ஆன்மாக்கள் கன்மங்களை யறியத் திருமேனி கொள்ளும்பொழுது ஞானசத்தியாகவும், எழிற்கிரியை முன்பெருக - ஆன்மாக்கள் கன் மத்திற்கு ஈடாக வடிவும் தொழிலுமாக முதலிலே விரிக்குமிடத்துக் கிரியாசத்தியாகவும் (இப்படி நிகழ்தல் அறிதல் நிருமித்தற் பொருட்டு இச்சா ஞானக் கிரியா சொரூபனாய்), குடிலையினை அடைந்து நாதம் மூந்து விந்து அக்கரம் மனு நன்மொழி முறையே வகுத்து - சுத்தமாயையிலே வந்து பொருந்தி அந்தச் சுத்தமாயை யிலே நாதம் விந்துவைத் தோற்றுவித்து விந்துவிலே மூந்தின வாக்குகள் நான்கையும் ஐம்பத்தோரக்கரத்தையும் (அக்கரவுண்மை கொண்டே எண்பத்தொரு பதத்தையும்) நல்ல சத்தகோடி மகாமந் திரத்தையும் வேதாகம சாத்திர புராணங்களையும் முறைமையிலே தோற்றுவித்து, தன் பொருவில் மந்திரத்தால் சதாசிவாதி யுதவி - தனக்கொப்பில்லாத விந்துவிலே தோற்றின் மந்திரங்களினாலே சதாசிவத்தையும் சதாசிவத்தினாலே ஈசுரத்தையும் ஈசுரத்தினாலே சுத்த வித்தையையும் தோற்றுவித்து, சகவிரிவுதரும் ஆற்கீழ் - பின்பு கலைமுதற் பிருதிவி ஈறாக முப்பத்தொரு தத்துவத்தையும் அசுத்தமாயையிலே தோற்றுவித்துப் பின்பு இந்தத்தத்துவங்கள் முப்பத்தொன்றையும் கவித்துக்கொண்ட காரண மாயையாகிய கல்லானிழற்கீழே எழுந்தருளியிருந்து, சரியாதி நால்வர்க்கு அன்ப மரத் துன்பமலம் பவமிருதி வழிதீர்த்து அறமுரைத்த கருணையனை அர்ச்சியும் இச்சியும் - இருடிகள் நால்வருக்கும் சிவதாகம் உண்டா

கும்படி துயரம்விளைக்கும் மலத்திரயத்தையும் ஜனனபயத்தையும் யமன் சத்துவத்துடனே பிடித்துப் போகிற மரணபயத்தையும் பற்றற நீக்கியருளிச் சரியை கிரியை யோகம் ஞானமென்னும் தன் மங்களையும் அருளிச்செய்த கிருபாளுவாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை இந்தச் சிவலிங்கத்திலே அருச்சனை செய்து அவனுடைய திருவடியைப் பிடிக்க ஆசைப்படுவீர்களாக என்பதாம்.

இதனாற் சொல்லியது சர்வத்தையும் சிருஷ்டித்த இன்புருவச் சிவனை இந்தச் சிவலிங்கத்திலே பூசிக்க என்றவாறு.

இன்புருவச் சிவன் - நீ அசைவற நின்றவிடத்திலே விளைந்த ஆனந்த வடிவனென அறிக.

சத்திகள் மூன்றும் இன்புருவச் சிவன்றானே என அறிக.

சுத்தமாயா தோற்றம் ஒழிவுகொண்டு சொல்லிற்றெனவறிக.

சிவதாகமுண்டாக மலத்திரயத்தை நீக்கி அறமுரைத்த தென்னையோவெனில், மலசம்பந்தத்துடனே கேட்கில் அந்தரிப்பதுமில்லை, கேட்கைக்குப் போதம் செல்லுவதுமில்லை, அந்தப்படுத்துகிற ஆசாரியனுக்கும் அருமை யர்தலாலெனவறிக. (12)

கரு. ஆதியா தாரசத்தி குடிலாந்த பீட

மாதனமேற் பரவித்தை யறங்கடரு மூர்த்தி

சோதியது மூர்த்திமா னின்ப மூர்த்தி

துணைவனென மும்மலர்க டுதையச் சாத்தி

யேதடியென் றிடிலடியா னெனதறநின் றதுதா

னெங்ஙனமா மருண்முகஞ்செய் யியல்புதிரு

மூதுயிர்மே லேதாகு மதுமுடி யா றிவற்றுண் [முகமா

முன்னுதவு பாத்தியாச மன்வார்க்ய முறையே.

(இ-ள்.) ஆதியாதாரசத்தி குடிலாந்த பீடம் - தனுகரண புவன போகங்களுக்கு ஆதாரமாகிய அசுத்த காரியமுதற் சுத்த மாயையீறாக ஆதனம்,.., மூர்த்திமான் இன்பமூர்த்தி துணைவனென மும்மலர்கள் துதையச் சாத்தி -

இந்த மூர்த்திக்குப் பிராணனாகிய மூர்த்திமான் சுகசொரூபியான ஆத்மலாபனென்றிப்படியே கண்டு ஆதனமூர்த்தி மூலமாக மூன்று புஷ்பஞ் சாத்தி, எது அடி என்றிடில் அடி யானெனது அற நின்றது தான் - இந்தச் சிவனுக்கு இரண்டு ஸ்ரீபாதமும் ஏதென்று சொல்லில், அநாதியுனக்கு உண்மையை மறைத்துத் தேகாதிப் பிரபஞ்சத்தை யான் எனது என்பித்து நின்ற திரோதாயியும் கிரியாசத்தியும், எங்ஙனமாமருண்முகஞ் செய்யியல்பு திருமுகமாம்-சர்வரோகத்தையும் சர்வதோமுகமாக நின்று நிர்விகற்பமாக அறியும் முறைமையையுடைய ஞானசத்தி திருமுக மண்டலம், மூதுயிர்மேலேதாகும் அது முடியாம் - அநாதியே ஆன்மாக்கள்மேலே அநுக்கிரகமாயிருக்கிற சத்தி எந்தச்சத்தியாகவேண்டும் அதுவே திருமுடியாகும், இவற்றுள் முன்உதவு பாத்தியாசமன அர்க்யம் முறையே - இந்தத்திருவடி திருமுகம் திருமுடி யிவையிற்றுள்ளே அடைவிலே திருவடி முதலாகப் பாத்திய ஆசமன அர்க்கியங் கொடுப்பாயாக என்பதாம்.

இதனாற் சொல்லியது மாயையிரண்டும் ஆதனமாகவும், பராசத்தி மூர்த்தியாகவும், பரமசிவன் மூர்த்திமானாகவும் பாவித்து ஆசனமூர்த்தி மூலம் சாத்தித் திரோதாயியும் கிரியாசத்தியும் திருவடியாகவும் ஞானசத்தி திருமுகமாகவும் இச்சாசத்தி திருமுடியாகவும் பாத்தியாசமன அர்க்கியம் கொடுக்கச் சொன்னதென அறிக.

யான் எனது என்பது திரோதாயியலது வேறொரு சத்திக்கடுத்த தொழிலல்லவாதல் அறிக.

அது என்றமையாலும் கிரியாசத்தியும் இந்த மூர்த்தத்துக்கு வேண்டுமாதலாலும் அதுவும் ஒரு திருவடியென அறிக.

மூதுயிர்மேல் இச்சையிருப்பது இச்சாசத்தியென அறிக. (13)

கச. ஆயது பாதியளித் தலாகற்றி யேந்தி
யருளுருவிற் றயிலக்காப் பவைசாத்திக் கழித்து
நாயன்மா ரானைந்தி லிரண்டுபே ருரையார்
நவையெனமற் றிரண்டொன்று நயந்துளதான்
[மூலைக்கண்

பாயுநீர் கன்னலின் னிளநீர் மும்மைப்
பழங்கொண்ணீர் மதுநீர்முன் பாரித் தாட்டி
மேயவெலா மிலதேனீர் வேண்டளவும் பொழிந்து
விளங்கொலிய னீர்புலர விரித்துச் சாத்தே.

(இ—ள்.) ஆய் தூபாதி அளித்து அலரகற்றி எந்தி - இந்த உடையவருக்கு நன்மையுடைத்தாய தூப தீபங்களும் கொடுத்து இப்பொழுது சாத்தின மும்மலருங்கழித்து வேதிகையிலேயாதல் கையிலேயாதல் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, அருளுருவில் தயிலக்காப்பதை சாத்திக் கழித்து-இந்தக் காருண்ணிய மூர்த்தியிலே எண்ணெய்க் காப்புச் சாத்தித் திருமஞ்சனஞ் செய்து, நாயன்மார் - சொன்ன சமயாசாரியர்கள், ஆன் ஐந்தில்-பசுவினிடத்துண்டாகிய பஞ்சகவ்வியத்தில், இரண்டுபேர் உரையார் நவையென - கோமய கோசலமிரண்டும் ஆகா என்று இவையிற்றிற் பேர் ஐந்தென்ற திருப்பாட்டுக்களில் அருளிச்செய்யாமல் அடக்கி யருளிச்செய்தார்கள், மற்றிரண்டொன்று நயந்துளது -நின்ற நெய் பால் தயிருமாக அஞ்சையும் ஒரு பாத்திரத்திலே கூட்டி யுண்டாக்கிவைத்து, ஆன்முலைக் கண்பாயும் நீர் கன்னலின்நீர் இளநீர் மும்மைப்பழங்கொள்நீர் மதுநீர் முன்பாரித்து ஆட்டி-பசுவின் முலைக்கண்ணாலே சொரியும்பால் கருப்பஞ்சாறு இளநீர் பலா மா வாழையிலுண்டாகிய முப்பழங்களும் பிழிந்த சாரம் தேன் ஆகிய இந்தப் பஞ்சாமிர்தத்தையும் ஆடியருளப்பண்ணி, மேயவெலாம் இலதேல் நீர் வேண்டளவும் பொழிந்து-இவற்றில் ஒன்றும் தேடிக் கிடைத்ததில்லையாகில் உன் கருத்துக்கு வேண்டியமட்டும் வெகுவாகத் திருமஞ்சனத்திலே ஆடியருளப் பண்ணி, விளங்கொலியல் நீர்புலர விரித்துச் சாத்து-திருமேனியில் திருமஞ்சனம் புலரும்படி வெள்ளைத் திருவொற்றாடையை விரித்துச் சாத்துவாயாக என்பதாம். (14)

கரு. வாசமலி மலர்சாத்திச் சேலை சாத்தி
மலர்தவிசி லிருத்திமல ரடிவி ளக்கி
யாசமனந் திருநீறர்க் கியமு நல்கி
யடலேறு மிருடிகளு மடைவே போற்றிப்

பூசையன லாசையினற் றேசிகர்க்கு நல்கிப்
புரிந்தொருமை நினைந்திறைமுன் புனித மாக்கித்
தேசுமிகு திருவமுது தெண்ணீ ரேற்றித்
திருந்தியவர்க் கியசலத்தாற் சுத்தி சேர்த்தே.

(இ-ள்.) வாசமலி மலர்சாத்தி...மலர்தவிசில் இருத்தி - மண மலிபுஷ்பஞ் சாத்திப் பரிவட்ட முதலானவை சாத்தி முன்னே கற்பிக்கப்பட்ட விரிந்த சிங்காதனத்திலே எழுந்தருளப் பண்ணுவித்து, மலரடி விளக்கி - தாமரைமலர் போன்ற ஸ்ரீபாதங்களை விளக்கி, ஆசமனம் அர்க்கியம் திருநீறும் நல்கி - திருவடிகளிற் பாத்தியமும் முகம் முடிகளில் ஆசமன அர்க்கியமுங்கொடுத்து விபூதி சாத்தி, அடலேறும் இருடிகளும் அடைவே போற்றி-வெற்றியுடைய இடப தேவரைத் தெற்காகவும் அகத்தியன் புலத்தியன் வலது பக்கத்திலும் சனகன் சனற்குமரன் இடது பக்கத்திலுமாக முறைமையிலே இவர்கள் திருநாம மந்திரத்தால் எழுந்தருளப்பண்ணி பூசை அனலாசையில் நற்றேசிகர்க்கு நல்கி-அக்கினி திக்கிலே நன்மையுடைத்தாகிய உன்னுடைய ஆசாரியனை எழுந்தருளப்பண்ணி அர்ச்சனை செய்து, பொருந்து ஒருமை நினைந்து - ஏகாக்கிர சித்தனாய்ச் சிவனுடைய வுண்மையிலே அழுந்தித் தியானம்பண்ணி, இறைமுன் புனிதம் ஆக்கி - உடையவர் திருமுன்பாகத் திருமெழுக்காலே சுத்தமாக்கிக் கோடிட்டுப் பத்திரம்போட்டு, தேசுமிகு திருவமுது தெண்ணீர் ஏற்றி - மறுவற்ற நட்சத்திரம்போல விளங்காநின்ற திருவமுது ஒரு தளிகையிலும் சீதளபானீயம் ஒருவட்டகையிலுமாக எழுந்தருளப்பண்ணி ஆசாரியர்களுக்கு ஒரு பாத்திரத்தில் அமுதேற்றி, திருந்திய அர்க்கிய சலத்தால் சுத்திசேர்த்து - வளப்பமுடைய அர்க்கிய சலத்தாலே புரோட்சித்துச் சுத்தமுண்டாக்கி என்பதாம். (15)

கசு. இனிக்குநெறி யருச்சித்துக் காவல்வளைத் தமுதீந்
திறையமுது செயமலர்க்கை யேந்தியிரந் துரைத்
தனக்கமைய விளக்கியகைச் சந்து கந்தத் [துத்
தாரணிதாம் பூலாதி தயங்க நல்கி

யனைத்துலகுந் தருமாற்கீழ்த் தென்முகமண் டபத்து
ளன்பர்தொழ வீற்றிருக்கை யறிந்தடிகள் விளக்கிக்
கனற்கமழுந் தூபாதி யாலத்தி நீறொண்
கவரிகுடை கண்ணாடி கருதிச் சேர்த்தே.

(இ—ள்.) இனிக்கும் நெறி அருச்சித்து - இந்த அமுதை யாகத்துக்குப் பொருந்தும் முறைமையிலே புஷ்பங்களும் சாத்தி, காவல் வளைத்து - நிரீக்கணாதி சுத்திசெய்து திக்குபந்தனம் அவகுண்டனம் தேனுமுத்திரைகொடுத்து அந்த அமுதைச் சலத்தினாலே வளைத்து, அமுது ஈந்து - ஆசமனம் கொடுத்து, இறை அமுதுசெய்ய மலர்க்கை எந்தி இரந்துரைத்து-தம்பிரானார் திரு அமுது செய்தருளவேண்டுமென்று புஷ்பம் பொருந்தின கையேந்தி வேண்டிக்கொண்டு விண்ணப்பஞ்செய்து அமுதுசெயப் பண்ணுவித்து, தன்க்கமைய - தனக்கு அமைய (த் தம்பிரானார் திறையமுது செய்து திருப்தி வந்ததாகக் கருதி), விளக்கிய கை - ஸ்ரீஹஸ்தம் விளக்கி அத்திருக்கரத்திலே, சந்து கந்தத்தார் அணி - திருமேற் பூச்சும் மணம் பொருந்திய மாலையும் அணிந்து, தாம்பூலாதி தயங்கநல்கி-விளங்கத் தாம்பூல முதலானவை அமுதுசெயப்பண்ணி, அனைத்துலகுந் தொழும் ஆற்கீழ்த் தென்முக மண்டபத்துள் அன்பர் தொழ வீற்றிருக்கை அறிந்து அடிகள் விளக்கி - எல்லாவுலகுந் தொழப்பட்ட ஆலநிழலில் தெற்கு முகமான மண்டபத்திலே, முன்புபோலப் பத்தர்களெல்லாம் சேவித்துநின்று தோத்திரம்செய்ய எழுந்தருளியிருக்கிறதாகத் தியானம்பண்ணித் தம்பிரானார்திருவடிகளை விளக்கி, கனற்கமழும் தூபாதி ஆலத்தி நீறு ஒண்கவரி குடை கண்ணாடி - அக்கினியிலே மணங்கமழாநின்ற தூபமும் தீபமும் திருவாலத்தி திருநீறு அழகிய வெண்சாமரை கொற்றக்குடை இவற்றை அடைவிலே பணிமாறி, கருதிச்சேர்த்து - இவைகள் இல்லையாகில் இவற்றைத் தியானித்து அந்த அந்தத் தானங்களிலே அறிந்து பணிமாறப் பண்ணுவாயாக என்பதாம்.

எண்ணெய்க்காப்பு முதற் பணிமாறப்பண்ணுகிற தீரூகக்கொடுக்கிற பதார்த்தத்தின் பேராலே சுவாகா எனக்கொடுக்க. (16)

கஎ. ஐயைந்தா மக்கவட மங்குலிநான் கணிந்தே
வங்குட்டங் கொண்டொருநான் கருநாமங் கணித்துக்
கையெஞ்சா மலரோடஞ் சலிசெய்து கடவுள்
கற்பித்த தொழிலிதுநீ கண்ட பண்டங்
கொய்யும்பூ மலராதி கலாதி நாதன்
கொளுவியபோ தெனதுணர்வுன் குலவு பூசை
செய்கென்று லென்செய்கே னிட்டபணி யுருவச்
செல்வநீ கொள்கென்று திருமுன் சேர்த்தே.

(இ-ள்.) ஐயைந்தாம் அக்கவடம் அங்குலி நான்கு அணிந்து - இருபத்தைந்தாலே ஆக்கப்பட்டிருக்கிற உருத்திராக்ஷ மாலையை அங்குட்டத்தின் கீழில் நால்விரலுந் தரித்துக்கொண்டு, அங்குட்டங் கொண்டு ஒரு நான்கு அருநாமம் கணித்து - பெருவிரலைக்கொண்டு நூறுஉரு ஏறும்படி நாலுபிரகாரம் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்து, கை எஞ்சா மலரோடு அஞ்சலிசெய்து - செபவடத்தை அங்குட்டத்திலே சுற்றிக்கொண்டு கையாலே நிறையப் புஷ்பத்தை எடுத்து அஞ்சலியத்தத்துடனே தியானஞ் செய்திருந்து (விண்ணப்பஞ் செய்வான்), கடவுள் கற்பித்த தொழிலிது-கர்த்தாவே, அடியேனுக்கு ஒரு சொல்லுண்டோ? இப்போது பூசிக்கிற பணிவிடை தேவரீர் ஏவியருளின பணிவிடை, நீ கண்ட பண்டம் கொய்யும் பூமலராதி - இப்பொழுது எடுத்துவந்த திருமஞ்சனம் திருப்பள்ளித் தாமம் நைவேத்தியம் முதலானவையெல்லாம் தேவரீர் முன்னே உண்டாக்கிவைத்து அறிந்திருக்கிற பதார்த்தம், கலாதி நாதன் கொளுவிய போது எனது உணர்வு-அடியேனுக்குத் தனக்கென்ன அறிவில்லை; தேவரீர் கலைமுதலான அறிவுகளையும் அடியேனையுங்கூட்டியபோது உண்டான அறிவாயிருக்கும் அடியேனறிவு ஆகையாலே, உன்குலவு பூசை செய்கென்றால் என் செய்கேன்-தொழிலும் பொருளும் அறிவும் தேவரீர்க்குடையனவா யிருக்கையால் ஞாதாக்களாலே கொண்டாடப்பட்ட தேவரீர் பூசையை அடியேன் கிஞ்சிக்கன் செய்ய வேண்டுமென்று விசாரித்தால் என்னாலே எப்படி முடியும், இட்ட

பணி உருவச்செல்வ நீ கொள் என்று திருமுன் சேர்த்து - எல்லாம் தேவரீர்க்கு உடைமையானாலும் தேவரீரே அடியேன் பூசிக்கும்படி ஏவியருளிய பணிவிடையை அடியேன் சரீரமுள்ளமட்டும் கொண்டருளல்வேண்டும் ஞானச் செல்வனே! என்று வேண்டிக்கொண்டு கையிற் புஷ்பத்துடனே அர்க்கியசலமும் கூட்டித் திருமுன்னே அர்ச்சிப்பாயாக என்பதாம். (17)

௧௮. எழுந்தலர் தூஉய்ப் பணிந்திருந்து நியாத மெய்தி
யெழிற்குரவ ரிறைவன்றா ளெய்த வேத்தி
மொழிந்துயர்கோ யிலையணுகப் பண்ணு வித்து
முன்னுதவு பாத்தியா சமனார்க்ய முறையே
பொழிந்தலர் தூஉய்ப் பீடத்துந் தண்டிலத்து மிறைஞ்சிப்
போக்குகவர்க் கியஞான பூசையிது புனிதற்
கழுந்துபர குரவர்தரு முச்சிட்ட நுகர்தற்
காமல்ல மாலியமென் றறைந்தனவா கமமே.

(இ-ள்.) எழுந்து அலர் தூஉய்ப் பணிந்து:- எழுந்திருந்து வேறு புஷ்பம் எடுத்துச் சந்நிதியிலே போட்டுத் தெண்டம்பண்ணி, இருந்து நியாதம் எய்தி - இருந்து கரநியாசமும் அங்கநியாசமும் செய்து, எழில் குரவர் இறைவன் தாள் எய்த ஏத்தி - அழகிய ஆசாரியர்களுக்கும் மற்றும் உண்டானவர்களுக்கும் பராங்முக வர்க்கியம் கொடுத்து மீண்டும் இவர்கள் இன்புருவச் சிவன் திருவடிகளிலே புகும்படி வேண்டிக்கொண்டு, மொழிந்து - தம்பிரானார்க்கும் ஆசாரியர்க்கும் வேண்டிய தோத்திரமும் செய்து, உயர் கோயிலை அணுகப் பண்ணுவித்து முன்னுதவு பாத்தியாசமன அர்க்கியம் முறையே பொழிந்து - முன்னுதவு பாத்தியாசமன அர்க்கியம் கொடுத்துப் பராங்முக அர்க்கியமுங் கொடுத்துச் சேமஞ்சாத்திப் பெரிய பெட்டக் கோயிலிலே எழுந்தருளப் பண்ணுவித்து, அலர் தூஉய்ப் பீடத்தும் தண்டிலத்தும் இறைஞ்சி-பீடத்திலும் மெத்தை முதலானவற்றிலும் அடைவிலே அர்க்கியம் கொடுத்து ஆசனம் மூர்த்தி மூலம்

சாத்திப்பின்பு பாத்தியாசமனார்க்கியமும் கொடுத்துப் பீடத்திலே திருப்பள்ளித்தாமமுஞ் சாத்தித் தலையாலே வணங்கி, போக்குக அர்க்கியம் - அர்க்கிய சலத்தை மாற்றிப் போக, ஞானபூசை இது - இப்பொழுது சொன்ன முறைமையிலே பூசிக்கில் இதுவே ஞான பூசையாவது, புனிதற்கு அழுந்து பரகுரவர் தரும் உச்சிட்டம் நுகர் தற்காம் - இப்பொழுது பூசைகொண்ட நின்மலனாகிய பரமசிவனுக் கும் அவன்றிருவடியிலே அழுந்தின பரமாசாரியர்க்கும் அமுது செயப்பண்ணிக் கழிந்த நின்மாலியம் புசிக்கைக்காம், அல்ல மாலியம் என்று அறைந்தன ஆகமம் - நின்மாலிய மல்லவென்று ஆகமங்கள் சொல்லும் என்பதாம். (18)

ஞான பூசாவிதி மூலமும் பழைய உரையும்
[illegible]ப்பெற்றன.

செய்யுள் முதற் குறிப்பகராதி

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
அஞ்சலிசெய்திருந்து	9	ஓங்குடலங்	10
ஆசொழிய	2	சந்தான குரவரிவர்	8
ஆதியாதார சத்தி	15	ஞானமேனியனை	11
ஆயதாபாதி யளித்து	16	நாலிரண்டு திருவுருவம்	12
இற்புகுந்து	5	நிலம்புனநீக்	4
இன்புருவச் சிவன்	13	நீராடித்	6
இனிக்கு நெறி	18	பணித்தவருளுடன்	1
எழுந்தலர் தூஉய்	21	வாசமலிமலர்	17
ஐயைந்தாமக்கவடம்	20	விரவுமுமாபதி சிவன்	7

தி. அப்புலிங்கம்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி

உமாபதி சிவாசாரிய சுவாமிகள்

இயற்றியருளிய

ஞானபூசாகரணம், ஞானபூசை, ஞானதீட்சை, ஞானந்தியேட்டி, போசனவிதி.

இவை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரஆதீனத்து

௨௪வது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள் கட்டளையிட்டருளியபடி

தருமபுர ஆதீனத்து அடியார்குழாத்துள் ஒருவராகிய

ஸ்ரீமத் சட்டைநாதத்தம்பிரான் அவர்கள்

எழுதிய குறிப்புரையுடன்

வித்துவசிகாமணி

ஸ்ரீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை

அவர்களால்

சீகாழி

திரிபுரசுந்தரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

[காப்பிரைட்] 1934